**தலைப்பு 310 – அரசாங்கத் தொழிற்சாலை தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 310 – அரசாங்கத் தொழிற்சாலையின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு வணிக முற்பணக் கணக்கு, களஞ்சிய முற்பணக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 ஆகஸ்ட் 04 ஆந் திகதி அரசாங்கத் தொழிற்சாலையின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, களஞ்சிய முற்பணக் கணக்கு, வணிக முற்பணக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

---

அரசாங்கத் தொழிற்சாலைக்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய நிதி ஏற்பாடு ரூபா 142.32 மில்லியனாக இருந்ததுடன், இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 128.34 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அரசாங்க தொழிற்சாலைக்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதி ஏற்பாடுகளில் ரூபா 13.98 மில்லியன் அதாவது 9.82 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 90.63 | 76.97 | 13.66 | 15.07 |
| மூலதனம் | 51.69 | 51.37 | 0.32 | 0.62 |
| மொத்தம் | 142.32 | 128.34 | 13.98 | 9.82 |

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அரசாங்கத் தொழிற்சாலைக்குரிய 31001 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ள படியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 27.00 | 26.11 | 21.00 | 28.59 | 120.00 | 82.09 |

### 2.2.2 களஞ்சிய முற்பணக் கணக்கு

அரசாங்கத் தொழிற்சாலையினால் பேணப்பட்டிருந்த 31002 ஆம் விடய இலக்க களஞ்சிய முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவு | | செலவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானவை | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானவை |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 80.00 | 76.99 | 80.00 | 113.80 | 40.00 | 33.35 |

## 2.2.3 வணிக முற்பணக் கணக்கு

### (அ) பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்

அரசாங்கத் தொழிற்சாலையினால் பேணப்பட்டிருந்த 31003 ஆம் விடய இலக்க ஆற்றப்பட்ட வேலை முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவு | | செலவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானவை | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானவை |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 315.00 | 307.50 | 320.00 | 352.15 | 180.00 | 126.92 |

### (ஆ) நிதி விளைவுகள்

அரசாங்கத் தொழிற்சாலையினால் பேணப்பட்ட 31003 ஆம் விடய இலக்க ஆற்றப்பட்ட வேலை முற்பணக் கணக்கின் நிதி விளைவுகள் பின்வருமாறு இருந்தது.

| முற்பணக் கணக்கு நடவடிக்கைகள் | நிதி விளைவுகள் | | | |
|---|---|---|---|---|
| | 2016 | | 2015 | |
| | கருதுகோள் கட்டணம் நீங்கலாக இலாபம்/ நட்டம் | கருதுகோள் கட்டணம் அடங்கலாக இலாபம்/ நட்டம் | கருதுகோள் கட்டணம் நீங்கலாக இலாபம்/ நட்டம் | கருதுகோள் கட்டணம் அடங்கலாக இலாபம்/ நட்டம் |
| | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் |
| ஆற்றப்பட்ட வேலை முற்பணக் கணக்கு | 9.60 | 9.40 | 4.29 | 4.09 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

அரசாங்கத் தொழிற்சாலையின் கீழுள்ள 7002/0000/00/0043/0016/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 39.08 மில்லியனாக இருந்தது.

## 2.4 கணக்காய்வு அவதானிப்பு

அரசாங்கத் தொழிற்சாலையின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, களஞ்சிய முற்பணக் கணக்கு, வணிக முற்பணக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில்

உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை

தொழிற்சாலையினால் நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் சேதங்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

**நிதிஏற்பாடுகளை விஞ்சி பொறுப்புக்கள் ஏற்படுத்தப்படல்**

நிதிப்பிரமாணம் 94(1) இற்கு முரணாக 03 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளில் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்பினை விஞ்சி ரூபா 1,048,390 தொகையான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

### 3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

31001 ஆம் விடய இலக்க அசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,063,057 ஆக இருந்ததுடன் 01 வருடம் முதல் 14 வருடங்கள் வரையான காலமாக இருந்து வந்த போதிலும் அந் நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதன் பின்தொடர் நடவடிக்கை பலவீனமான நிலைமையில் காணப்பட்டது.

(ஆ) முற்பணம் தொடர்பான கட்டுப்பாட்டுக் கணக்கில் காணப்படும் இணக்கம் செய்யப்படாத ரூபா 20,109 தொடர்பாக தகவல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 ஆற்றப்பட்ட வேலைக்கான முற்பணக் கணக்கு

விலை இலக்கம் 31003 ஆம் இலக்க ஆற்றப்பட்ட வேலை முற்பணக்கணக்கின் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவு கணக்காய்வு பரிசோதனையின் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 7,846,000 பெறுமதியான விற்பனை மாதிரிப் பட்டியலொன்று 2015 ஆம் ஆண்டின் போது முற்பண பெறுவனவாக தவறுதலாக கணக்கீடு செய்தலை மீளாய்வாண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2016 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் அது தீர்வு செய்யப்படாத முற்பணமாக குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டில் களஞ்சிய முற்பணக் கணக்கிற்கு திருப்பி அனுப்பிவைக்கப்பட்ட பொருட்கள் பெறுமதி ரூபா 971,849 ஆல் கூடுதலாக பதிவு செய்யப்பட்டமையால்

அவ்வாண்டின் இலாபம் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. அத்தவறு மீளாய்வாண்டின் போதும் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் கடன்பட்டோர் மீதி ரூபா 666,387,583 ஆக இருந்ததுடன் கணக்குடன் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலையின் பிரகாரம் ரூபா 514,524,039 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 151,863,544 ஆக கடன்பட்டோருக்காக பட்டோலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2016 சனவரி 06 ஆந் திகதிய 248/2016 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை பிரகாரம் காலாண்டு ரீதியாக சீராக்கப்பட்ட பெறுமதி சேர் வரி உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் தொழிற்சாலையால் 2016 திசெம்பர் 31 வரையிலும் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பி வைக்க வேண்டிய ரூபா 162,753,536 ஆன பெறுமதி சேர் வரி அனுப்பி வைக்கப்படாமல் தொழிற்சாலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(உ) நிதிப்பிரமாணம் 509 இன் பிரகாரம் செய்யப்பட்ட முற்பணக் கணக்கிற்குரிய 6000/0000/00/0008/0046/000 ஆம் இலக்க பெறுமானத்தேய்வு ஒதுக்க நிதியத்தின் கீழ் ரூபா 24,032,253 ஆக மீதி நாளது வரையாக்கப்படாமல் வருடக் கணக்காக செயலற்றுக் காணப்பட்டது.

## 3.5 பொது வைப்புக் கணக்கு

தொழிற்சாலையின் இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் ரூபா 15,000 கேள்வி வைப்புக்கள் தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதி வரையில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.6 உள்ளகக் கணக்காய்வு

தொழிற்சாலையால் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.7 செயலாற்றல்

2016 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 510 மில்லியன் கூட்டுத்தொகையான 13 செயற்திட்டங்கள் மீளய்வாண்டின் போது பூர்த்திசெய்யப்பட வேண்டியிருந்தது. அதில் 04 செயற்திட்டங்கள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. 05 செயற்திட்டங்கள் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், 04 செயற்திட்டங்கள் 45 சதவீதத்திற்கு குறைந்த அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. இதன் பிரகாரம் 2016 ஆம் ஆண்டின் செயலாற்றல் மொத்தமாக குறைந்த மட்டத்தில் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது.

## 3.8 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 31 | 20 | 11 |
| (ii) | மூன்றாம் நிலை | 10 | 03 | 07 |
| (iii) | இரண்டாம் நிலை | 197 | 114 | 83 |
| (iv) | ஆரம்ப நிலை | 552 | 321 | 231 |
| | மொத்தம் | 790 | 458 | 332 |